

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 141

வியாழக்கிழமை
16 ஏப்ரல் 2026

சித்திரை 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

# இலங்கைக்கு தொடர்ந்து ஐ.நா. ஆதரவு வழங்கும்!

## வோல்கர் ட்ரக் உறுதி

**கொழும்பு, ஏப்ரல் 16**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால், இலங்கைக்குத் தொடர்ச்சியான ஆதரவு வழங்கப்படும்-இவ்வாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக் தெரிவித்தார்.**

»11

முகமாலைப் பகுதியில்

# முதியவரின் சடலம் காயங்களுடன் மீட்பு

## பளைப் பொலிஸார் விசாரணை

கிளிநொச்சி, ஏப். 16
பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் முதியவர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இளையவன் நல்லதம்பி (வயது-71) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
முகமாலை, பொந்தர்

»11

# வாந்தியால் வந்த விபரீதம்; 8 வயது சிறுமி பலி

யாழ்ப்பாணம், ஏப். 16
வயிற்று வலியால் அவதிப்பட்டுவந்த சிறுமியொருத்தி, சுவாசக் குழாய்க்குள் வாந்தி சென்றதையடுத்து ஏற்பட்ட இருதயச் செயலிழப்புக் காரணமாக நேற்று உயிரிழந்தார்.
யாழ்ப்பாணம், புதிய சோனகத்தெரு பகுதியைச் சேர்ந்த முகமது ஜிகாத் மதிகா

»11

# நிலக்கரி மோசடியாளர்களை தப்பிப்பதற்கு விடமாட்டோம்!

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 16
நிலக்கரி மோசடியில் ஈடுபட்ட எவரையும் தப்பிப்பதற்கு விடமாட்டோம் என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தால் முன்னெடுக்கப்

»11

வடக்கு மாகாணசபையின்

# திணைக்களங்கள் அனைத்தும் இனி விசேட கண்காணிப்பில்!

யாழ்ப்பாணம், ஏப். 16
வடக்கு மாகாணசபையின் கீழ் இயங்கும் திணைக்களங்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கவும், பொதுமக்கள் முன்வைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுக்கவும் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனின் கண்காணிப்பின்கீழ் விசேட குழு உருவாக்

»11



# படகுகள் மோதி விபத்து மீனவர் பரிதாபச் சாவு!

மன்னார், ஏப். 16
மன்னார் - வங்காலைப்பாடு கடற்பகுதியில் இரண்டு படகுகள் மோதி விபத்துக்கு உள்ளானதில் மீனவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.
வங்காலைப்பாடு மீனவர்

»11

# சிறுமி மீது துர்நடத்தை சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணம், ஏப். 16
11 வயதுச் சிறுமியை துர்நடத்தைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 28 வயதுடைய சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.
மூளாய் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

»11

# நெடுந்தீவுக்கு நீதிகோரி ஏப்ரல் 24 போராட்டம்!



யாழ்ப்பாணம், ஏப். 16
நெடுந்தீவில் மிக நீண்டகாலமாக நிலவும் பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்வரும் 24ஆம் திகதி போராட்டம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் போராட்டக் குழு விடுத்துள்ள ஊடக

»11

ஜூலை மாதத்திலிருந்து அஸ்வெசும கொடுப்பனவு

விரிவு பக்கம்:- 02

# ஐம்பதுக்கும் அதிகமானவர்களை அந்தரிக்கவிட்டது நெடுந்தாரகை!

## நெடுந்தீவு மாவிலித் துறைமுகத்தில் குழப்பம்

யாழ்ப்பாணம், ஏப். 16
நெடுந்தீவு - குறிகாட்டுவான் பயணிகள் படகுச் சேவையை முன்னெடுத்து வரும் நெடுந்தாரகைப் படகு, நேற்றுப் புதன் கிழமை மாலை நெடுந்தீவு மாவிலித் துறைமுகத்திலிருந்து சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றாமல் சென்றமையால் பெரும் குழப்பம் ஏற்பட்டது.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
நெடுந்தீவுமாவிலித்துறைமுகத்திலிருந்து நெடுந்தாரகைப் படகின் இறுதிச்சேவை நேற்று மாலை 3 மணியளவில் இடம் பெற்றது. சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நெடுந்தீவு சென்றிருந்தோர், தொழில் நிமித்தம்

»11



முச்சந்தி முனி

"நெடுந்தீவுக்கு இந்தப் போராட்டமாவது அங்கையுள்ள குறையளை இல்லாமல் செய்யவேணும் கண்டியளோ"

இ.போ.ச. வருமானம் உச்சம் தொட்டது!

விரிவு பக்கம்:- 05

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கல்வியில் அதிகரிக்கும் பெண்களின் பங்களிப்பு

கொழும்பு, ஏப்.16

**இலங்கையில் பாடசாலைக் கல்வி மற்றும் உயர் கல்வியில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்துக் காணப்படுவதுடன், குறைந்த கல்வியறிவு கொண்ட மாவட்டங்களில் நுவரெலியாவும் உள்ளடங்கியுள்ளது என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

2024ஆம் ஆண்டுக்கான இலங்கையின் மக்கள் தொகை மற்றும் வீட்டுவசதிக் கணக்கெடுப்புத் தரவுகளின் அடிப்படையில், நாட்டின் கல்விநிலை குறித்த தகவல்களிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு காலப் பகுதியில், இலங்கையில் 5 முதல் 24 வயதுக்குட்பட்ட மொத்த மக்கள் தொகையான 6,695,363 நபர்களில் 4,351,225 பேர் (65.0 வீதம்) பாடசாலைக் கல்வியில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் பாலின ரீதியாகப் பார்க்கும்போது, பெண்களின் பங்களிப்பு (65.9 வீதம்) ஆண்களைவிட (64.1 வீதம்) சற்று அதிகமாகக் காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## சுற்றுச்சூழல் விருதுக்கு விண்ணப்பிக்க முடியும்

கொழும்பு, ஏப்.16

சுற்றாடல் பாதுகாப்புக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களைக் கௌரவிக்கும் வகையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை வழங்கும் "ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருதுகள் 2026" திட்டத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30, 2026 ஆம் திகதிக்கு முன்னர் தகுதியுடைய தரப்பினர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் துறை கழிவு முகாமைத்துவம், மருந்து உற்பத்தி, ஆடை மற்றும் தேயிலை தொழிற்சாலைகள் உள்ளிட்ட பாரிய மற்றும் சிறு/நடுத்தர அளவிலான கைத்தொழில்கள்.

திட்டங்கள் துறை சிறிய நீர்மின் உற்பத்தி, சூரிய சக்தி மற்றும் காற்று சக்தி உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்கள்.

நிறுவனங்கள் மற்றும் ஊடகத்துறை பாடசாலைகள், அரச நிறுவனங்கள், காவல்துறை சுற்றாடல் பிரிவுகள், வெகுஜன ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் என்ற மூன்று பிரதான பிரிவுகளின் கீழ் இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

"செழிப்பான தேசம் அழகான வாழ்க்கை" எனும் கொள்கைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் இம்முறை விருது விழாவில், மீள்சுழற்சி செய்யப்பட்ட அலுமினியக் கேன்களால் தயாரிக்கப்பட்ட விருதுகள் வழங்கப்படவுள்ளன. நிபுணர் குழுவின் மதிப்பீட்டின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்குத் தங்கம், வெள்ளி, வெண்கலம் மற்றும் தகுதி விருதுகள் வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவங்களை www.cea.lk என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும் என்றும், மேலதிக தகவல்களுக்காக 0112873447 / 0112872278 என்ற தொலைபேசி எண்களின் ஊடாகவும் தொடர்பு கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## உடுல்தெனிய கைதில் மனித உரிமை மீறல்!

கொழும்பு, ஏப்.16

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனியவின் கைது மற்றும் பணி இடைநீக்கம் என்பன முறையான சட்ட நடைமுறைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படவில்லை எனவும், அதன் மூலம் அவரது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

துஷார உபுல்தெனியவின் மனைவியால் அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்தே ஆணைக்குழு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம், துஷார உபுல்தெனியவின் கைது மற்றும் பணி இடைநீக்கம் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் நீதியமைச்சின் செயலாளர் ஆகிய தரப்புகள் அரசியலமைப்பு விதிகளை மீறியுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு வழங்கல் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தி, கைதி ஒருவரை சட்டவிரோதமாக விடுவித்த குற்றச்சாட்டை அடுத்தே துஷார உபுல்தெனிய பணி இடைநீக்கம் செய்யப்பட்டார்.

அதைத்தொடர்ந்து விசாரணையை நடுநிலையாக முன்னெடுக்கவேண்டும் எனக்கூறி, கடந்த ஆண்டு ஜூன் 9 ஆம் திகதி அவரைப் பணியிலிருந்து இடைநீக்கம் செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்தது. (எ-இ)

## ஜூலை மாதம் முதல் அஸ்வெசும கொடுப்பனவு

கொழும்பு, ஏப்.16

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் முதலாம் கட்டப் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள், எதிர்வரும் ஜூலை மாதம் முதல் மீண்டும் வழங்கப்படவுள்ளன என்று நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

பயனாளிகள் தொடர்பான கணக்கெடுப்புப் பணிகள் நிறைவடைந்தவுடன் இந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் நிமல் கொத்தவலகெதர தெரிவித்துள்ளதாவது-

பயனாளிகளின் தகைமைகளை உறுதிப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் தரவுச் சரிபார்ப்பு மற்றும் கள ஆய்வுகள் மே மாத இறுதிக்குள் முழுமையாக நிறைவு செய்யப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

நலன்புரி நன்மைகளைப் பெறுவதற்காக போலியான தகவல்களை வழங்குவோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே மோசடியான முறையில் நன்மைகளைப் பெற்றுக்கொண்டவர்களிடம் இருந்து அந்த நிதியை அறவிடுவதற்கும், அவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தகவல்களை இற்றைப்படுத்தும் பணிகளைச் சீராக முன்னெடுக்கும் நோக்கில், 2023ஆம் ஆண்டு முதலாம் கட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட பயனாளிகளுக்கான கொடுப்பனவுக் காலம் ஜூன் மாதம் வரை விசேடமாக நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுகள் மற்றும் தரவுச் சரிபார்ப்புகள் அனைத்தும் முறையாக நிறைவடைந்த பின்னர், தகுதியுடைய பயனாளிகளுக்கு ஜூலை மாதம் முதல் கொடுப்பனவுகள் தடையின்றி வழங்கப்படவுள்ளன- என்றார். (எ-இ)

## குரங்கு பாய்ந்ததால் விபத்து; அரச உத்தியோகத்தர் காயம்

பளை, ஏப். 16

வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர் மீது குரங்குப் பாய்ந்ததில் நிலைகுலைந்து கீழே வீழ்ந்து விபத்துக்குள்ளான அரச அலுவலர் ஒருவர் சிறுகாயங்களுடன் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை பளை ஏ - 9 வீதியில் நடந்துள்ளது. (ச-9)



## நாணயப்பெறுமதி நேற்றுச் சற்று உயர்வு

கொழும்பு, ஏப்.16

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்றுச் சற்று அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி இன்று வெளியிட்டுள்ள நாணயமாற்று வீதத்தின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 311 ரூபா 78 சதமாகவும், விற்பனைப் பெறுமதி 319 ரூபா 26 சதமாகவும் காணப்பட்டது.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 366 ரூபா 4 சதமாகவும், விற்பனைப் பெறுமதி 377 ரூபா 78 சதமாகவும் காணப்பட்டது. சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 396 ரூபா 16 சதமாகவும், விற்பனைப் பெறுமதி 411 ரூபா 74 சதமாகவும் காணப்பட்டது. கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 224 ரூபா 98 சதமாகவும், விற்பனைப் பெறுமதி 233 ரூபா 2 சதமாகவும் காணப்பட்டது. (எ-இ)

## ஜெட் வேகத்தில் தங்கத்தின் விலை

கொழும்பு, ஏப்.16

உலகச் சந்தையில் தங்கம் மற்றும் வெள்ளியின் விலை நேற்று அதிகரித்ததை அடுத்து, உள்நாட்டுச் சந்தையில் தங்கவிலை 4 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது. 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 402,000 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 369,800 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசாங்க நிறுவனங்கள் வழமைபோல் ஆரம்பம்!

**கொழும்பு, ஏப். 16**

**சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டு விடுமுறையின் பின்னர், நாட்டின் அனைத்து அரச நிறுவனங்களும் நேற்று முதல் மீண்டும் திறக்கப்பட்டு, அவற்றின் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பியுள்ளன.**

அரச அலுவலகங்கள் ஏப்ரல் 15, 16 மற்றும் 17 ஆகிய நாள்களில் வழமை போல இயங்கும். விடுமுறைக்குப் பிந்தைய காலப்பகுதியில் பொதுமக்களுக்கான சேவைகள் தடையின்றிக் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, நாடு முழுவதும் உள்ள நிர்வாக நடவடிக்கைகள் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளன. பொதுமக்களுக்கான அத்தியாவசிய சேவைகள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் ஏனைய அரச திணைக்களங்களில் இன்று முதல் வழமையான நேர அட்டவணையின்படி சேவைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## எயார்லைன்ஸ் எனக்கூறி இணையவழி நிதிமோசடி

கொழும்பு, ஏப். 16

தேசிய விமானசேவை நிறுவனமான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பெயரைப் போலி இணையத்தளங்களில் பயன்படுத்தி, பொதுமக்களின் வங்கிக் கணக்குகளிலிருந்து இலட்சக்கணக்கான ரூபாவைக் கொள்ளையடிக்கும் கும்பல் குறித்துக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. பமுணுகமவைச் சேர்ந்த நபருடைய வங்கிக்கணக்கிலிருந்து சுமார் 55 இலட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் கடவத்தையைச் சேர்ந்த பெண்ணொருவரின் கணக்கிலிருந்து சுமார் 3.5 இலட்சம் ரூபாவுக்கு அதிகமான பணம் போலி இணையத்தளம் ஊடாகத் திருடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இருவர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இந்த விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இவ்வாறான மோசடிகளுக்கு உள்ளானால் உடனடியாக 1991 அல்லது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தைத் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மீட்கப்பட்ட ஈரானியர்கள் தாயகத்துக்கு திரும்பினர்

கொழும்பு, ஏப். 16

இலங்கையின் பாதுகாப்பில் தங்கவைக்கப்பட்டிருந்த ஈரான் கடற்படையைச் சேர்ந்த வீரர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விசேட ஏற்பாடுகளின் கீழ் அவர்களது தாயகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்ததாவது- அண்மையில் ஈரானிய கப்பலொன்று இலங்கைக் கடற்பரப்புக்கு அருகில் வைத்து அமெரிக்க நீர்மூழ்கித் தாக்குதலுக்கு உள்ளானபோது 32 ஈரானியக் கடற்படை வீரர்களும், மேலும் கப்பலில் இருந்த 204 மாலுமிகளும் அதிலிருந்து மீட்கப்பட்டனர். காயமடைந்த நிலையில் இலங்கைக்கடற்படையால் மீட்கப்பட்ட இவர்கள் பின்னர் நாட்டில் பாதுகாப்பு நடவடிக்கைகளின்கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். இந்தநிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மொத்தம் 236 ஈரானியர்கள் தாயகம் திரும்பியுள்ளனர். இவர்களை அழைத்துச் செல்ல 'Iran09' என்ற விசேட விமானம் பயன்படுத்தப்பட்டது. (ச-இ)

## ஹைஏஸ் மோதி குடும்பஸ்தர் பலி



மாத்தறை, ஏப். 16

தமிழ், சிங்களப் புத்தாண்டு தினமான நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கோர விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாத்தறை, வெலிகம பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 58வயதுடையஇரண்டுபிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வெலிபிட்டிய நோக்கித் தனது சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த நபரை பின்னால் அதிவேகமாக வந்த ஹைஏஸ் ஒன்று மோதியுள்ளது. இந்த விபத்தின் காரணமாக சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (ச-இ)

## பாவனைக்குதவாத இறைச்சி விற்றவருக்கு நடவடிக்கை

களுவாஞ்சிக்குடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட கோழி இறைச்சிக் கடையொன்றில் இறந்த பாவனைக்குதவாத கோழிகளின் இறைச்சியைக் குளிர்சாதனப் பெட்டியில் விற்பனைக்காக வைத்திருந்த வியாபாரிக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திடீர்ப்பரிசோதனைநடவடிக்கையின்போது 57.5 கிலோகிராம் இறந்த கோழிகளின் இறைச்சி மீட்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பட்டாசு விபத்துகள் இம்முறை குறைவு

கொழும்பு, ஏப். 16

நாட்டில் கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது, இந்தப் புத்தாண்டுக் காலத்தில் பட்டாசு விபத்துகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் புத்தாண்டு மற்றும் பண்டிகைக் காலங்களில் அதிகளவான, வீதி விபத்துகள் மற்றும் பட்டாசுகளால் ஏற்படும் விபத்துகள் பதிவாகும். கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது, பட்டாசு விபத்துகளின் எண்ணிக்கை தற்போது படிப்படியாகக் குறைந்துள்ளது என்றும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## ரிமோட் பொம்மைக்கும் ஆப்பு?

சும்மா கிடந்த இரும்புக்கம்பியை வளைச்சு சூலமாக்கினால், அது 'ஆடு கொண்டா மாடு கொண்டா' எண்டு பெரும் ஆட்டம் போடுமாம். ஏனடா இதைச் சூலமாக்கினம் எண்டு அதை உருவாக்கினவையே யோசிக்க வைக்கிற அளவுக்கு நிலைமை போயிடும். யாழ்ப்பாணத்தில இருக்கிற 'பெரிய சபை' ஒண்டின்ர தலைமைப்பதவிக்கு ஆருக்குமே முன்னப்பின்ன தெரியாத ஒரு அம்மணியைக் கொண்டந்து இருத்தின வீட்டுக்கட்சி, இப்ப அவாவை எப்பிடி அந்தப் பதவியில இருந்துகீழ இறக்கிறது எண்டு ஓடியாடித் திரியுது.

யாழ்ப்பாணத்துப் பெரிய சபையின்ர 'தலைமைப் பொறுப்புக்கு' விசயம் தெரிஞ்சவையை விட்டால், அதை வைச்சுக்கொண்டு அவை பெரிசா வளர்ந்திடுவினமோ எண்ட பயத்தில தான், இந்த அம்மணியை ஒப்புக்குச் சப்பாணியா ஒரு பொம்மைத் 'தலையா' இருக்கட்டுமெண்டு வீட்டுக்கட்சியின்ர மேலிடம் நியமிச்சது. அவா என்ன செய்யிறா எண்டு நோட் பண்ணுறதுக்கும், அவா என்ன செய்யோணும் எண்டு சொல்லிக்குடுக்கிறதுக்கும் கட்சியின் மேலிடத்துக்கு நெருக்கமான வையையும் அவாவின்ர ஆலோசகராகவும் போட்டிருக்கினம். அதால வெளிப் பார்வைக்கு அந்த அம்மணி பெரிய சபையின்ர 'தலையா ரியா' தெரிஞ்சாலும், அவாவை ஆட்டுவிக்கிற ரிமோட் கொண்ட்ரோல் கட்சியின்ர மேலிடத்தில தான் இருக்கும். ஆனால் கட்சி நினைச்சமாதிரி அந்த அம்மணிக்கு அரசி யல், அபிவிருத்தி விசயங்கள்தான் தெரியாதே தவிர, தனக்குத்தானே தலைப்பாகை கட்டி பேரெடுக்கிற வழிவகையள் நல்லாவே தெரியுமாம். அதால தன்னைக் கண்காணிக்கிறதுக்கும், அட்வைஸ் பண்ணுறதுக்கும் கட்சியால போடுப்பட்டவை யையே உச்சிக்கொண்டு அவா சில வித்தையள் காட்டிப் போட்டாவாம். இதால இப்ப கட்சியின்ர மேலிடம் கடுப்பாகி, வேற ஆளை சபைக்கு தலையாரியாப் போடுவமெண்டு யோசிக்குதாம்.

நிர்வாகம் செய்து அனுபவம் இல்லாத தால, சபைக்கூட்டங்களை நேரகாலத்துக்கு முடிக்காமல் இழுத்தடிக்கிறா எண்டு பெரிய குற்றச்சாட்டை எல்லாரும் சொல்லுகினம். அநேகமான கூட்டங்கள் இரவு 9 மணி வரை நடக்குதாம். அந்தச் சபையில வேறை பெண் உறுப்பினர்மாரும் இருக்கினம். அவையளுக்கு இரவு 9 மணிக்குப் பிறகு கூட்டம் முடிஞ்சா என்னெண்டு வீட்ட தனிய போகேலும்? என்னதான் அரசியல் செய்தாலும், வீடுவாசலும் அவைக்கு இருக்கே. சில பெண் உறுப்பினர்மார் வீட்டில 'இப்பிடி நேரஞ்செல்ல வாறதெண்டால் அரசியலுக்கே முழுக்குப் போட்டிட்டு வீட்ட நில்லு' எண்டு குடும்பத்துக்க பிரச்சினையாம். அதைப்போய் பெண் உறுப்பினர்மார் சபையின்ர தலையாரியா இருக்கிற அம்மணியிட்டப் போய் சொல்லியிருக்கினம். ஆனால் அந்த அம்மணி அதைக் காது குடுத்து கேக்கிறாவே இல்லையாம். 'அரசியலுக்கு வந்தால் நேரகாலம் பாக்கேலாது' எண்டு சொல்லிப்போட்டு பழையபடி இரவு 9 மணிமட்டும் கூட்டத்தை இழுக்கிறவாம். அப்பிடி இரவிரவா கூட்டம் வைச்சும் உருப்படியா ஒண்டும் கதைக்கிறதும் இல்லை. ஒரே விசயத்தை வைச்சே சுவிங்கம் மாதிரி நேரத்தைக் கடத்திறதுதான் மிச்சம். எள்ளோட சேர்ந்து எலிப்புழுக்கையும் தேவையில்லாமல் காயிற மாதிரி, சபைக் கூட்டத்தில உறுப்பினர்மாரோட சேர்ந்து சபை அதிகாரிமாரும் அந்தச் சபையில காயவேண்டி இருக்காம். அவையின்ர டியூட்டி நேரம் முடிஞ்ச பிறகும் அந்தக் குழு, இந்தக் குழு எண்டு குழுக்கூட்டங்களை உந்தச் சபையின்ர தலையாரி அம்மணி வைச்சு வதைக்கிறவாம். அதால அதிகாரிமாரும் அம்மணியில கடும் வன் மத்திலதான் இருக்கினம். எல்லாத்தையும் விட அம்மணி செய்த இன்னொரு வேலைதான் கட்சியின்ர மேலிடத்தை இன்னும் கடுப்பாக்கி,அவான்ர பதவிக்கே உலைவைக்கிற அளவுக்கு வந்து நிக்குது.அது என்னெண்டு நாளைக்குப் பாப்பம்.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media






# இரண்டு நாள்களில் 36 விபத்துகள் பதிவு

கொழும்பு, ஏப். 16

கடந்த 13 மற்றும் 14ஆம் திகதிகளில் மாத்திரம் கொழும்பு தேசிய மருத்துவமனையில் 36 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. இந்த விபத்துகளில் சிக்கி இருவர் உயிரிழந்தனர். ஏப்ரல் 13ஆம் திகதி 19 விபத்துகளும், புத்தாண்டு தினமான ஏப்ரல் 14ஆம் திகதி 17 விபத்துகளும் பதிவாகியுள்ளன. இதேவேளை, குறித்த இரண்டு நாள்களில் மாத்திரம் 35 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஏப்ரல் 13ஆம் திகதி 14 மோதல்களும் நேற்றுமுன்தினம் முதல் நேற்றுக் காலை வரையுமான காலப்பகுதியில் 21 மோதல்களும் பதிவாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பேருந்து மோதி இளைஞர் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்ட இ.போ.ச.பேருந்து, ஏ9 வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் காயமடைந்தார். இந்த விபத்து பளை நகர்ப்பகுதியில் நேற்று இடம்பெற்றது. காயமடைந்த இளைஞன் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-16)

# நிர்வாகத்தெரிவில் குளறுபடி: மன்னாரில் போராட்டம்

மன்னார், ஏப். 16

மன்னார் மாவட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கக் கிளையில் நிலவுவதாகக் கூறப்படும் நிர்வாகச் சீர்கேடுகள் மற்றும் முறைகேடான இடைக்காலச்சபை நியமனங்களுக்கு எதிராக, 50க்கும் மேற்பட்ட தன்னார்வப் பணியாளர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மன்னார் பொது நூலகத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய பணியாளர்கள், தமது வாய்களைச் சிவப்புத் துணியால் கட்டியவாறு அமைதி ஊர்வலமாகச் சென்று மன்னார் மாவட்டச் செயலகத்தை அடைந்தனர். 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஊதியமின்றி சேவையாற்றும் எமக்கு சங்கத்தின் உத்தியோகபூர்வ அங்கத்துவத்தை வழங்க நிர்வாகம் திட்டமிட்டு மறுத்துவருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளாகப் பொதுச்சபைக் கூட்டங்கள் நடத்தப்படாமல், தனிப்பட்ட சிலரின் விருப்பப்படி முறையற்ற விதத்தில் 'இடைக்காலச்சபை' அமைக்கப்பட்டுள்ளது. முறையற்ற விதத்தில் உருவாக்கப்பட்டுள்ள இடைக்காலச்சபையை உடனடியாகக் கலைக்கவேண்டும். மாவட்டச் செயலாளர் தலைமையில் முறையான விசாரணைகள் நடத்தப்படவேண்டும். ஜனநாயக அடிப்படையில் சுயாதீனமான பொதுச்சபைக் கூட்டத்தை நடத்தி புதிய நிர்வாகத்தைத் தெரிவுசெய்யவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்து தமது கோரிக்கை அடங்கிய மனுவை மாவட்டச் செயலரிடம் கையளித்தனர். (ச-56)

### சாவகச்சேரியில்

# பழுதடைந்த கடலுணவுகள் கைப்பற்றப்பட்டு அழிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 16

சாவகச்சேரி பொதுச்சந்தையின் கடலுணவு விற்பனைப் பிரிவில், பழுதடைந்த நிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மீன்கள் உள்ளிட்ட கடலுணவுகள் சாவகச்சேரி நகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரிச் சந்தையில் பழுதடைந்த கடலுணவுகள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் வழங்கிய இரகசியத் தகவலின் அடிப்படையில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சு. குணசாந்தன் நேற்றுத் திடீர்ப் பரிசோதனையை மேற்கொண்டார்.

இதன்போது விற்பனைக்காகப் பெட்டிகளில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த பெருமளவிலான பழுதடைந்த கடலுணவுகள் கண்டறியப்பட்டன. கைப்பற்றப்பட்ட அனைத்துக்கடலுணவுகளும் உடனடியாக வாகனத்தில் ஏற்றப்பட்டு, பாதுகாப்பான இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மண்ணில் புதைத்து அழிக்கப்பட்டன.

பொதுமக்களின் உடல்நலத்துக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் செயற்படும் வியாபாரிகளுக்கு எதிராகக் கடும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. (ச-இ)



# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அரசாங்கவகையில் எதிர்பார்க்கும் காரியங்களில் தடை தாமதம் உண்டாகும். குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்கள் வாக்குவாதம் செய்தாலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொடுப்பீர்கள்.

**மிதுனம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். கணவன் – மனைவிக்கிடையே இருந்த கருத்துவேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது.

**கடகம்:** பரபரப்பான நாளாக அமையும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். தாயின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்குமேல் புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாகமுடியும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். சிலருக்கு உடல் ஆரோக்கியம் சிறிய அளவில் பாதிக்கப்பட்டு, உரிய சிகிச்சையின் மூலம் உடனே நிவாரணம் கிடைத்துவிடும்.

**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத் துணை பக்கபலமாக இருப்பார்.

**விருச்சிகம்:** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்களால் ஓரளவுக்கு நன்மை ஏற்படும். [illegible]

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள்.

**மகரம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். ஆனால், திடீர்ச் செலவுகளால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும்.

**கும்பம்:** இன்று புதிய முயற்சி சாதகமாக முடியும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# தளிர்கள் வாடாதிருக்க...!

பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவுத் திட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதில் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டியுள்ளார் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின். மதிய உணவுக்காக ஒரு மாணவருக்குத் தலா 110 ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியதைத் தொடர்ந்தே, அந்தத் தொகை போதாது என்றும், நிதியொதுக்கீடு அதிகரிக்கப்படாவிடில் இந்தத் திட்டம் இடைநடுவில் கைவிடப்படச் சாத்தியங்கள் அதிகம் உள்ளன என்றும் கூறியிருக்கின்றார் அவர்.

தெற்காசியாவில் அதிக ஊட்டச்சத்துக் குறைபாடுகளைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கையும் ஒன்று. இந்தத் தீவில் 2.3 மில்லியன் சிறுவர்கள் உட்பட சுமார் 5.7 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்கிறது யுனிசெப். இந்த நிலைமை மேலும் மோசமடையாமல் இருக்க வேண்டுமாயின், சிறுவர்களை மையப்படுத்திய உணவூட்டல் திட்டங்கள் மேலும் வலுப்பெற வேண்டியது அவசியம். இத்தகைய பின்னணியில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் முன்வைத்த கருத்துகள் கனதியாகவும் கவனிக்கப்பட வேண்டியவையாகவும் அமைகின்றன. அவை போர்க்கால அடிப்படையில் தீர்வுதேட வேண்டிய விடயங்களும்கூட.

இலங்கையில் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதும், பாடசாலை மாணவர்களை மையப்படுத்திய உணவூட்டல்திட்டங்களைவலுப்படுத்துவதும் அவ்வளவு கடினமான காரியங்களல்ல. 'ஓர் அரசாங்கமாக' குறைந்தபட்சத் திட்டமிடல்களுடன், குறைந்தகால அவகாசத்தில் மிகமிக இலாவகமாகச் செய்யத்தகுந்த விடயமிது. இறக்குமதியைச் சார்ந்திருக்காது, உள்நாட்டுக் கட்டமைப்புகள் மூலமாக இந்த உணவூட்டல் திட்டங்களை பலமடங்கு வலுவாகக் கட்டமைக்க முடியும். பால், மீன், இறைச்சி, முட்டை, தானியங்கள் என ஊட்டச்சத்தை வாரிக்குவிக்கும் விடயதானங்களில் இலங்கை தன்னிறைவு காண்பதெல்லாம் செயற்கரிய செயல்களில்லை. ஆனால், மாறிமாறி ஆட்சிக்குவரும் அரசாங்கங்களின் அசண்டையீனமும், அரசியல் இலாபத்தை நோக்காகக் கொண்ட செயற்பாடுகளும்தான் இலங்கையர்களை நின்றுகொல்கின்றது. இந்தச் சாபக்கேட்டின் விளைவாகவே, மாணவர்களை மையப்படுத்திய உணவூட்டல் திட்டங்கள் தற்போது அந்தரத்தில் தொங்குகின்றன.


2019ஆம் ஆண்டிலிருந்து பொருளாதார நெருக்கடி இலங்கையை கொஞ்சம்கொஞ்சமாக விழுங்க ஆரம்பித்தது. ஒரு மானை, கொஞ்சம்கொஞ்சமாக ஆட்கொண்டு அதன் மூச்சைநிறுத்தும் மலைப்பாம்புபோல இலங்கையின் பொருளாதாரம், வலிந்து ஏற்படுத்தப்பட்ட முரண்பிறழ்நிலைகளால் வலுவிழந்து வந்தது. இந்தப் பொருண்மியப் பேரிடருக்கு வறிய குடும்பங்களே இரையாகிப் போயின. அத்தகைய ஆயிரக்கணக்கான குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களின் உணவு மூலமாகவும், ஊட்டச்சத்து மூலமாகவும் பாடசாலைகளின் மதிய உணவூட்டல் திட்டமே காணப்படுகின்றது. எனவே, அந்தத் திட்டத்தை எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்குப் பலப்படுத்த அரசாங்கம் விளையவேண்டும். இதுவொரு செலவல்ல. மாறாக நாட்டின் எதிர்காலத்தின் மீதான பெரும் முதலீடு என்பதை அரசாங்கம் உணர்வது அவசியம்.



## பொய்யாமொழி

**துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**
**இன்புறூஉம் இன்சொ லவர்க்கு**

**பொருள்:** யாரிடத்திலும் இன்புறத்தக்க இன்சொல் வழங்குவோர்க்குத் துன்பத்தை மிகுதிப்படுத்தும் வறுமை என்பது இல்லையாகும்.




# புதிய இலக்கை எட்டிய இ.போ.ச. வருமானம்!



கொழும்பு, ஏப். 16

**சித்திரைப் புத்தாண்டு விசேட போக்குவரத்துச் சேவையின் கீழ், கடந்த 09ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரையிலான ஐந்து நாள்களில் மட்டும் இலங்கை போக்குவரத்துச் சபை 600 மில்லியன் ரூபாவுக்கும் அதிக வருமானத்தை ஈட்டி சாதனை படைத்துள்ளது.**

கடந்த 11 ஆம் திகதி மாத்திரம் 213 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, தூர இடங்களிலிருந்து மீண்டும் கொழும்பு நோக்கிய பேருந்து சேவைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விசேட போக்குவரத்துச் சேவை எதிர்வரும் 21ஆம் திகதி வரை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வெவ்வேறு இடங்களில் இருவேறு கொலைகள்

கொழும்பு, ஏப். 16

நாட்டில் இரண்டு பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களில் பெண் ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

வெல்லவாய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெட்டொலகம பகுதியில் பெண் ஒருவர் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். சம்பவத்தில் 32 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை பயாகல பகுதியில் நபர் ஒருவர் தலையில் தடி ஒன்றால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளார். உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நபர் என தெரியவந்துள்ளது. (ச-இ)

## இரு ஓட்டோக்கள் விபத்து; இரண்டு சாரதிகளும் பலி

கொழும்பு, ஏப். 16

காலி எல்பிட்டி பிரதான வீதியில் இரண்டு முச்சக்கர வண்டிகள் நேற்றுமுன்தினம் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற கோர விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

எல்பிட்டி பிரதான வீதியில் இரண்டு முச்சக்கரவண்டிகள் அதிவேகமாகப் பயணித்தபோது, எதிர்பாராத விதமாக ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் இரண்டு முச்சக்கர வண்டிகளும் பலத்த சேதமடைந்ததுடன் விபத்தில் படுகாயமடைந்த இரண்டு முச்சக்கர வண்டிகளின் சாரதிகளை அருகில் இருந்தவர்கள் மீட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும், அங்கு சிகிச்சையின்போது இருவரும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)

## யானை தாக்கி ஒருவர் பலி!

பொலநறுவை மெதிரிகிரியை பகுதியில் காட்டு யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார். மெதிரிகிரியை பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய விவசாயி ஒருவர் தனது வயல் வேலைகளை முடித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போதே காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். உயிரிழந்தவர் நான்கு பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பவம் குறித்து மெதிரிகிரியை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)

## ஐஸ் போதைப்பொருளுடன் இரண்டு பெண்கள் கைது!


கொழும்பு, ஏப். 16

கம்பஹா மீரிகமை பகுதியில் சட்டவிரோத 'ஐஸ்' போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த இரண்டு பெண்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 25 மற்றும் 27 வயதுடைய யுவதிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# ஈரான் மீதான முற்றுகையால் கடும் நெருக்கடியில் ட்ரம்ப்!

## ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

நியூயோர்க், ஏப்.16

**ஈரான் மீதான அமெரிக்காவின் கடற்படை முற்றுகையால், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்னெப்போதும் இல்லாத வகையில் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளார் என்று இராஜதந்திர ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

தற்போதைய நடவடிக்கை காரணமாக, ட்ரம்ப் எந்தவொரு மாபெரும் வெற்றியையும் பெறவில்லை என, அமெரிக்கப் பாதுகாப்புத் துறையின் முன்னாள் துணை உதவிச் செயலாளர் டேவிட் செனி குறிப்பிட்டுள்ளார்.

இந்த முற்றுகையின் மூலம் தன் மீதான அழுத்தத்தை அவரே அதிகரித்துக் கொண்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஹோர்மூஸ் நீரிணை முடக்கப்பட்டுள்ளதால் அமெரிக்காவை விட சீனா, இந்தியா மற்றும் தென்கொரியா போன்ற நாடுகளே பெரும் பாதிப்புகளைச் சந்தித்துள்ளன.

இந்த நாடுகள் தங்களின் எரிசக்தித் தேவைகளுக்காகச் சர்வதேச அளவில் அமெரிக்காவுக்கு அழுத்தங்களைக் கொடுக்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, அமெரிக்காவின் பங்களிப்பு இன்றி ஹோர்மூஸ் நீரிணையில் தடையற்ற கப்பல் போக்குவரத்தை மீண்டும் உறுதி செய்வதற்கான போருக்குப் பிந்திய திட்டமொன்றை ஐரோப்பிய நாடுகள் தயாரிக்க ஆரம்பித்துள்ளன என்று வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச வர்த்தகக் கப்பல்கள் பாதுகாப்பாகச் செல்வதை உறுதி செய்ய ஐரோப்பிய நாடுகள் ஒரு பரந்த கூட்டணியை உருவாக்கத் திட்டமிட்டுள்ளன.

இந்தக் கூட்டணியில் பல்வேறு நாடுகள் இடம்பெற்றாலும், அமெரிக்காவைத் தவிர்த்து இந்தத் திட்டத்தை முன்னெடுக்க ஐரோப்பா ஆலோசித்து வருகிறது என்றும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஏ-இ)

# முடிவுறும் நிலையில் ஈரானுடனான போர்!

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு

நியூயோர்க், ஏப்.16

ஈரானுடனான போர் விரைவில் முடிவுக்கு வரும் நிலையில் உள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே தற்போது 2 வாரகால தற்காலிக போர்நிறுத்தம் நடைமுறையில் உள்ளது. பாகிஸ்தானில் பாகிஸ்தானின் அனுசரணையுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்துள்ள நிலையில், இரு நாடுகளுக்கும் இடையே இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தற்காலிகப் போர்நிறுத்தம் முடிவடைவதற்கு முன்னர் நிரந்தரத் தீர்வைக் காண பாகிஸ்தான் தரப்பில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், "ஈரான் போர் முடிவடையும் நிலைக்கு வந்துள்ளது. இப்போது தாக்குதல்களை நிறுத்தினாலும், அந்த நாடு மீண்டும் கட்டியெழுவதற்கு குறைந்தது 20 ஆண்டுகள் ஆகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானிடம் அணு ஆயுதத்திறன் இருப்பதை எங்களால் அனுமதிக்க முடியாது. அந்த திறன்களை தகர்க்கவேண்டிய அவசியம் இருந்தது. இல்லையெனில், உலகம் முழுவதும் அவர்களை வலுவான சக்தியாக ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை உருவாகியிருக்கும். ஈரான் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள ஆர்வமாக உள்ளது. வரும் நாள்களில் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

# ஏதிலிகளுடன் சென்ற படகு அந்தமான் கடலில் விபத்து!

## 250 பேர் வரையில் மாயம்




லண்டன், ஏப்.16

ஏதிலிகளுடன் பயணித்த படகொன்று அந்தமான் கடலில் மூழ்கியுள்ளது. அதில் பயணித்த சுமார் 250 பேர் காணாமற்போயுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் ஏதிலிகள் முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மியான்மரில் நிலவும் உள்நாட்டுப் போர் மற்றும் அடக்குமுறைகளிலிருந்து தப்பித்து, மலேசியா போன்ற நாடுகளுக்குச் செல்லும் நோக்கில் ஏதிலிகள் பயணித்த படகே விபத்துக்குள்ளாகியுள்ளது. அதிகளவானவர்களை ஏற்றியமை, சீரற்ற காலநிலை என்பவை காரணமாக இந்த விபத்து நடந்துள்ளது.

இந்தோனேசியா நோக்கிப் பயணித்த பங்களாதேஷ் கடலோர பாதுகாப்புக் கப்பலொன்று, கடந்த 9 ஆம் திகதி கடலில் மிதந்து கொண்டிருந்த ஒரு பெண் உட்பட 9 பேரைக் காப்பாற்றியுள்ளது. மீட்கப்பட்ட 9 பேரில் 6 பேர் ஆட்கடத்தலில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் என அடையாளம் காணப்பட்டு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மலேசியாவில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி இவர்கள் ஏதிலிகளை ஏமாற்றி அழைத்துச் சென்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஏ-இ)



# பல பில்லியன் டொலரை மீளச் செலுத்தும் அமெரிக்கா

நியூயோர்க், ஏப்.16

அமெரிக்க நிறுவனங்கள் மற்றும் இறக்குமதியாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பில்லியன் கணக்கான டொலர் வரிப்பணத்தை மீள வழங்குவதற்கான விசேட நடைமுறையை அமெரிக்க அரசாங்கம் எதிர்வரும் திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தவுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் அமெரிக்க உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றில், இறக்குமதியாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட சில வரிகள் சட்டவிரோதமானவை என அறிவிக்கப்பட்டது.

இந்தத்தீர்ப்பைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு அவர்கள் செலுத்திய வரிப்பணத்தை மீண்டும் வழங்க வேண்டிய கட்டாயம் அமெரிக்க நிர்வாகத்துக்கு ஏற்பட்டுள்ளது. (ஏ-இ)



# சர்வதேசச் சட்டங்களுக்கு மரியாதை குறைகின்றது!


## அன்டனியோ குட்டேரெஸ் கவலை


உலகம் முழுவதும், பிரதானமாக மத்திய கிழக்குப் பகுதிகளில் சர்வதேசச் சட்டங்கள் மதிக்கப்படாமல் மீறப்பட்டு வருவது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டேரெஸ் கடும் கவலை வெளியிட்டுள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்துள்ளதாவது:

உலகளவில் சர்வதேசச் சட்டங்களுக்கான மரியாதை குறைந்து வருகின்றது. மத்திய கிழக்கில், போர் மற்றும் மோதல்களின் போது பின்பற்றப்பட வேண்டிய சர்வதேச விதிகள் மற்றும் சட்டங்கள் முற்றிலும் புறக்கணிக்கப்படுகின்றன. மத்திய கிழக்கில் நிலவும் தற்போதைய நெருக்கடிக்கு இராணுவ ரீதியான தீர்வு ஏதும் கிடையாது. முறையான மற்றும் தீவிரமான பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கப்பட வேண்டும். எட்டப்படும் போர்நிறுத்த உடன்படிக்கைகள் எக்காரணம் கொண்டும் மீறப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். தரைமட்ட நிலவரங்களைச் சீரமைக்க இஸ்ரேல் மற்றும் லெபனான் இடையே தற்போது நடைபெற்று வரும் பேச்சுகள் மிகவும் முக்கியமானது-என்றார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





## சீரணி அம்பாள் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.16


வரலாற்றுப் பிரசித்திபெற்ற சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழா நேற்றுப் புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 18 தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக திருவிழாக்கள் இடம்பெறும். எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தெப்பத்திருவிழாவும், 20 ஆம் திகதி திங்கட்கிழமை கைலாசவாகனத் திருவிழாவும், 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முத்துச்சப்பரத் திருவிழாவும், 29 ஆம் திகதி புதன்கிழமை திருமஞ்சத் திருவிழாவும், 30 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பரத் திருவிழாவும், அடுத்த மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல்10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-66-17)

## வடக்கின் அபிவிருத்திகள் சிறப்புக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.16


வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் ஆராயும் சிறப்புக் கலந்துரையாடல், ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. நிர்மாணப் பொருள்களின் விலையேற்றம் காரணமாக ஒப்பந்ததாரர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன. இதற்குத் தீர்வு காணும் வகையில் விலை மீளாய்வு உள்ளிட்ட பொருத்தமான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டது. அதேவேளை டித்வா இயற்கைப் பேரிடரால் பாதிப்புக்குள்ளான உட் கட்டமைப்புக்களின் மீள்கட்டுமானப் பணிகளைத் துரிதமாக முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான நிர்வாகச்செலவினங்கள் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பிலும் அதிகாரிகளுக்கு விசேட வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள் மற்றும் மாகாணப்பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர். (க-66-113)





தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் சித்திரைப் புத்தாண்டு பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சுவாமி வீதிவலம் வந்தார். (க-17)

## கலைமகள் விளையாட்டுக்கழகத்தின் விளையாட்டு விழாவும் கௌரவிப்பும்



யாழ்ப்பாணம், ஏப்.16

சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவும், சாதனை மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் கலைமகள் கலையரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கழகத் தலைவர் நீலவண்ணன் அனிஸ்ரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்கள் நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.யூட்ஸ் கருணாகரன், சங்கானை பிரதேச செயலகச் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ர.ரவிராஜ், சங்கானை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் மோ.கபிலன், சுழிபுரம் மேற்கு கிராம உத்தியோகத்தர் கி.ராஜ்கண்ணா மற்றும் மூளாய் கிராம உத்தியோகத்தர் ந.சிவரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-113)



வேலணை பிரதேச செயலகத்தின் நலன் புரிச் சங்கத்தில் சித்திரைப் புத்தாண்டுக்கான கைவிசேடம் வழங்கும் நிகழ்வு நேற்று சுபநேரத்தில் இடம் பெற்றது. (க-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நெடுந்தீவு குழந்தை இயேசு முன்பள்ளி யும், திருஇருதய முன்பள்ளியும் இணைந்து நடத்திய மழலைகளின் விளையாட்டு விழா கடந்த திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

(ச)



வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்தத் திருமஞ்சம் நேற்றுமுந்தினம் பெருமளவான அடியவர்கள் சூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது.

(ச)

**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 90 ரூபாய்.
நிலம் இழுத்து பதிக்க - 120 ரூபாய்
077 334 1281
(CS/47408)N-1

**வீடு வாடகைக்கு உண்டு**
இருபாலை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 4 அறைகளும், வாகனத் தரிப்பிடமும் உள்ள வீடு வாடகைக்கு உண்டு.
அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 077 654 4574

## பெயர்மாற்றம்

காணிக்கைநாதன் மேரி சுஜீபா ஆகிய நான் விவாகப் பதிவுபுத்தகம் இல.0301 இன்படி எனது பெயரை **டண்ஸ்ரன் மேரி சுஜீபா** என மாற்றம் செய்கின்றேன் என்பதை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**டண்ஸ்ரன் மேரி சுஜீபா**

(cs.61205) (N-1)

நம்பிக்கை | நாணயம் | கைராசி என்றென்றும் உங்கள்
ARANA JEWELLERY
ஆரணா ஜுவல்லறி
Arana Jewellery
AKSHAYA TRITIYA
செல்வத்தை பெருக்கி சௌபாக்கியத்தை வரமாக்கும் அஷ்ய திருதியை எனும் நன்நாளைக் கொண்டாட உங்களை அன்போடு அழைக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| காலை முகூர்த்தம் | : | 10.49 மு.ப. - 12.10 பி.ப ஏப்ரல் 19 |
| பிற்பகல் முகூர்த்தம் | : | 1.42 பி.ப. - 3.14 பி.ப ஏப்ரல் 19 |
| மாலை முகூர்த்தம் | : | 6.19 பி.ப. - 10.42 பி.ப ஏப்ரல் 19 |
| இரவு முகூர்த்தம் | : | 1.37 மு.ப. - 3.05 பி.ப ஏப்ரல் 20 |
| அதிகாலை முகூர்த்தம் | : | 4.33 மு.ப. - 6.00 பி.ப ஏப்ரல் 20 |

அட்ஷய திருதியை 19.04.2026, 20.04.2026 நன்நாளில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கும் 3 அதிஷ் டசாலிகளுக்கு தங்க நாணயம் மற்றும்
அத்தினத்தில் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.
அட்ஷய திருதியையை முன்னிட்டு எம்மிடம் கொள்வனவு தங்க நகைகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு






இல.91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3732, 021 222 4266, 077 862 4745
Arana Jewellery
முற்பதிவுகளுக்கு முந்துங்கள்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்

## தயாநிதி ரவிச்சந்திரன்



மலர்வு 15.04.1969 — உதிர்வு 15.04.2026

நீர்வேலி வடக்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தயாநிதி ரவிச்சந்திரன் அவர்கள் நேற்று (15.04.2026) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ரவிச்சந்திரனின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற முத்துராசா - அருளம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற நடராசா - பூமணி தம்பதியரின் மருமகளும், கலைப்பிரியா, சாருகா, சுபாங்கன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிசாந்தன், தியேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற விவேகானந்தன் மற்றும் சிவநாதன், சதானந்தன், நிற்குணானந்தன், சிவாநந்தினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2026) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
கணவர் - 077 608 7873

(CS/61209) J-1

# அதிவேக வீதிகளில் வரிசை

கொழும்பு, ஏப்.16

தெற்கு அதிவேக வீதியின் காலி, பின்னதுவ நுழைவாயிலில் நேற்று நீண்ட வாகன வரிசைகள் காணப்பட்டன. அதிவேக வீதியிலிருந்து வெளியேறுவதற்கும் உள்ளே பிரவேசிப்பதற்கும் அவ்வப்போது மிக நீண்ட வாகன வரிசைகள் காணப்பட்டன.

இதேவேளை, சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டுத் தமது சொந்த இடங்களுக்குச் சென்ற பயணிகளின் வசதிக்காக, நேற்று முதல் மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பா அனைத்து மாகாண போக்குவரத்து அதிகாரசபைகளுக்கும் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் ஷெரின் அத்துகோரள குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

ஓம் விரட் விஸ்வப் பிரமனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கந்தசாமி
செல்வராணி
(வவா)

தோற்றம் 12.05.1939
மறைவு 26.04.2025

அம்மா... எங்கள் உயர்விற்காய்
உழைத்திட்ட ஏணி நீங்கள்.
ஏற்றி விட்ட ஏணி எங்கே?
தேடுகின்றோம் காணவில்லை...
ஓராண்டும் சென்றதம்மா ....

சங்கத்தானை,
சாவகச்சேரி.

என்றும் உங்கள்
நினைவுடன்
குடும்பத்தினர்

(CS/61208) J-1

# மரண அறிவித்தல்

## நல்லையா மரியநாயகம்



தோற்றம் 16.03.1949 — மறைவு 14.04.2026

யாழ் மத்தியூஸ் வீதியை பிறப்பிடமாகவும், பிரதான வீதி கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா மரியநாயகம் அவர்கள் கடந்த (14.04.2026) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரம் - லட்சுமி தம்பதியரின் மருமகனும், செல்லமணியின் அன்புக் கணவரும், மரியதாஸ் (பெரியதம்பி), ஜேசுதாஸ் (மோகன்), மரியசீலி (பரிதா), fr. அருள்தாஸ், மரியமலர் (தர்சினி), ஞானதாஸ் (ஞானம்), உதயதாஸ் (உதயன்), பிரதீப்குமார் (பிரதீப்) ஆகியோரின் அன்புத்தந்தையும், ரதி, வதனி, ராஜன், சுபோதினி, மயூரி, மைதிலி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான தேவகுணராசா (குணம்), இராசநாயகம் (இராசா) மற்றும் லோகநாயகி (சுபத்திரா), சறோ ஆகியோரின் சகோதரரும், மரியநிலோயன், வினோஜினி, மரீனா, வினோஜன், மரியநிறோயன், யேசுநேசன், விது, டிசாந், தேனு, மரியநிக்சன், மரியரெஜனா, டிலக்சன், றொசலியா, றெக்மன், ஜொனிஸ்ரன், ஜொய்ஸ்லின், ஜொகானஸ், டார்லின் ஆகியோரின் அன்புப் பேரனும், தஸ்விந், றொகான், தஸ்வின், நிகான், கதரினா, மகிழ் ஆகியோரின் அன்புப் பூட்டனும், கிப்சலா, நொறின் ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (17.04.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொழும்புத்துறை செபமாலை மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

345/8 பிரதான வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
077 657 2079
077 866 7697

(CS/61210) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கணினிப் பாவனையை விடவும் கைபேசிப் பாவனை அதிகம்

## ஆய்வில் வெளியான தகவல்

இலங்கையர்களிடையே கணினிகளை விட கையடக்கத் தொலைபேசிகள் வழி சார்ந்த டிஜிட்டல் பயன்பாடு அதிகமாக உள்ளது என்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் மக்கள்தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்புத் தரவுகளின் அடிப்படையில், இலங்கையின் கணினி மற்றும் டிஜிட்டல் அறிவு சார்ந்த நிலை தகவல்களிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, இலங்கையின் ஒட்டுமொத்த கணினி அறிவு வீதம் 34.7 சதவீதமாக பதிவாகியுள்ளது.

ஸ்மார்ட் கைபேசிகளின் பயன்பாட்டையும் உள்ளடக்கிய டிஜிட்டல் அறிவு வீதமானது கணினி அறிவை விட இரண்டு மடங்கு அதிகமாக, அதாவது 67.6 சதவீதமாகக் காணப்படுகிறது.

இது இலங்கையர்களிடையே கணினிகளை விட கையடக்கத் தொலைபேசிகள் வழி சார்ந்த டிஜிட்டல் பயன்பாடு அதிகமாக இருப்பதை உறுதிப்படுத்துகிறது.

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் டிஜிட்டல் அறிவு வீதம் 50 சதவீதத்துக்கும் அதிகமாகவே காணப்படுகின்றது. கணினி அல்லது ஸ்மார்ட் கைபேசி மூலம் ஏதேனும் ஒரு பணியைச் செய்யக்கூடிய திறன் 'டிஜிட்டல் அறிவு' என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(எ-இ)


## மரண அறிவித்தல்



மலர்வு 01 . 07 . 1955

உதிர்வு 15 . 04 . 2026

### செல்வி சிவஞானம் நகுலேஸ்வரி

மருதனார்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிவஞானம் நகுலேஸ்வரி அவர்கள் நேற்று (15.04.2026) புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானம் - சிவகாமசுந்தரி தம்பதியரின் அன்பு மகளும், இராமநாதன், காலஞ்சென்ற செந்தில்நாதன், ஏகாம்பரநாதன் ஆகியோரின் சகோதரியும், மனோரஞ்சிதம், மிதுளா, தர்மாவதி ஆகியோரின் மைத்துனியும், ஆதித்தியா, திவாகரி, அபிஷ்கா ஆகியோரின் மாமியும், விசான், ஆருஸ், சாத்விகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16.04.2026) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவஞானம் ஏகாம்பரநாதன்
T.P: 077 2761 960
316, கே.கே.எஸ். றோட்,
மருதனார் மடம், சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31604) A



## மரண அறிவித்தல்



### பத்மராணி பரமானந்தராசா


ஆலங்குளாய் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடாகவும் கொண்ட பத்மராணி பரமானந்தராசா அவர்கள் 15.04.2026 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி இராசம்மா தம்பதியரின் ஏக புத்திரியும், பரமானந்தராசா (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பார்த்திபனின் (முன்னாள் ஆசிரியர்-அருணோதயாக்கல்லூரி) அன்புத் தாயாரும், குணேஸ்வரன், சுந்தரேஸ்வரன் (லண்டன்), ஜெயஈஸ்வரன் (இளைப்பாறிய ஆசிரியர் - வேம்படி மகளிர் கல்லூரி), அன்புச் சகோதரியும், குகனேஸ்வரியின், (கணக்காளர்) அன்பு மாமியாரும், மேனகாவின் அப்பம்மாவும், கனகலட்சுமி (நீர்வேலி), பத்மினி (லண்டன்), விஜயலட்சுமி (கோண்டாவில்) அன்பு மைத்துனியும், வள்ளுவன், கீர்த்தனா, சுதர்சன், பிரதீசன், லக்சனா, ஆர்த்திகா, வியூகன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2026) வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
076 341 8803

(cs.61207) N-1

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய பராபவ சித்திரைப் புத்தாண்டு உற்சவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது. (க-66)


## சமையலாளர் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள நிறுவன உயர் அதிகாரிக்கு சமையல் செய்யக் கூடியவர் தேவை.

தொடர்பு: 0777 17 22 17








## மரண அறிவித்தல்

### துரைச்சாமி தங்கராசா

(யாழ் அம்மா இண்டஸ்ட்ரீஸ் உரிமையாள)



மண்ணில் 02.10.1957

விண்ணில் 15.04.2026

செம்மலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுநிலை ஆசிரியை திருமதி நகுலராஹினி தங்கராசா (லீலா) அவர்களின் அன்புக் கணவரும், யாழ் அம்மா இண்டஸ்ட்ரீஸ் உரிமையாளரு மான திரு. துரைச்சாமி தங்கராசா அவர்கள் நேற்று (15.04.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.04.2026) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் செம்மலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி.

(CS 31605)A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு...

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கைத் தூதுவரும், ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதியுமான சுமித் தஸநாயக்க, வோல்கர் ட்ரக்கை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கைக்குத் தொடர்ந்து ஆதரவை வழங்கும் என்று வோல்கர் ட்ரக் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் அண்மைக்கால முன்னேற்றங்கள் தொடர்பில் ஆணையாளர் வோல்கர் ட்ரக்குக்கு, தூதுவர் தஸநாயக்க விளக்கமளித்தார். அத்துடன் பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

அதேபோன்று, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றுக்கு இலங்கை தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் என்றும், ஆக்கபூர்வமான ஈடுபாட்டை வெளிப்படுத்தும் எனவும் தூதுவர் தஸநாயக்க உறுதியளித்தார்.

இந்தக் கலந்துரையாடலின்போது, இலங்கையின் அண்மைக்காலச் செயற்றிட்டங்களுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக் பாராட்டுத் தெரிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## நிலக்கரி...

பட்ட நிலக்கரி இறக்குமதியில் ஊழல்கள் மற்றும் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்பது அப்பட்டமான விடயம். இதை நாங்கள் ஆரம்பத்தில் இருந்து தெரிவித்து வருகின்றோம். இதன் காரணமாகவே, எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக நாங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தோம். ஆனால், அரசாங்கம் பிரேரணையைத் தோற்கடித்து அவரைப் பாதுகாத்தது. எனினும், இந்த விடயத்தில் நாங்கள் எவரையும் தப்பிப்பதற்கு விடமாட்டோம். இந்த மோசடியுடன் தொடர்புடைய அனைவரும் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படுவார்கள். இந்த விடயத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். ஏனெனில், இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற பெரிய மோசடிகளில் இதுவும் ஒன்று - என்றார். (அ-ம)

## திணைக்களங்கள்...

கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆளுநர் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணசபை நிர்வாகத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதும், அரச சேவைகள் எவ்விதத் தடங்கலுமின்றி மக்களைச் சென்றடைவதை உறுதி செய்வதுமே இந்தக் குழு உருவாக்கப்பட்டதன் பிரதான நோக்கமாகும். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்குத் தினமும் ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இவை குறித்து அந்தந்தத் திணைக்களங்களுக்கு அறிவுறுத்தினாலும் உரிய காலப்பகுதிக்குள் தீர்வுகள் எட்டப்படுவதில்லை. இதனால், பொதுமக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதைத் தவிர்க்கும் நோக்கிலேயே இந்த விசேட குழு உருவாக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தை மக்கள் ஆட்சியில் அமர்த்தியதன் பிரதான நோக்கம் ஊழல் மற்றும் லஞ்சத்தை ஒழிப்பதாகும். எனவே, இந்தக் குழு முன்னெடுக்கும் கள ஆய்வுகள் மற்றும் விசாரணைகளில் எவ்விதமான அரசியல் தலையீடுகளும் இருக்காது. முழுமையான சுயாதீனத்துடன் அவர்கள் செயற்பட முடியும்.

வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்படும் நிதி வினைத்திறனான முறையில் செலவிடப்படுகின்றதா? என்பதை இந்தக் குழு தொடர்ச்சியாகக் கண்காணிக்க வேண்டும். அத்துடன் அரச அலுவலகங்களில் உத்தியோகத்தர்கள் கடமையில் இல்லாமை மற்றும் சேவைகளை வழங்கத் திட்டமிட்டு இழுத்தடித்தல் போன்ற பொதுமக்களின் முறைப்பாடுகள் குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தி அவற்றுக்குரிய தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் - என்றார். (அ-ம-66)

## சிறுமி...

வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் சிறுமி மருத்துவப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மருத்துவ அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் மேலதிக நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுக்கவுள்ளனர். (அ-ம-26)

## நெடுந்தீவுக்கு...

அறிக்கையில் உள்ளதாவது:-

நெடுந்தீவில் ஆயிரத்து 418 குடும்பங்கள் உள்ளன. ஆனால் இதுவரை குடிதண்ணீர்ப் பிரச்சினை நிவர்த்தி செய்யப்படவில்லை. நெடுந்தீவின் கடற் போக்குவரத்துக்குப் பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாடு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உள்ளது. குமுதினி, வடதாரகை, நெடுந்தாரகை ஆகிய மூன்று கடற்கலன்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரியதாகும். அதில் வடதாரகை திருத்த வேலைக்காகக் கொண்டு சென்றுள்ள நிலையில், நெடுந்தாரகை பழுதடைவதும், இயங்குவதுமாக நிச்சயமற்ற நிலையில் உள்ளது.

50 வருடங்களுக்கு மேலாக சேவையில் ஈடுபட்ட குமுதினி கடந்த மூன்று மாதங்களாக பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. 2009ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்தது தொடக்கம் இன்று வரை நான்கு தடவைக்கு மேல் குமுதினி திருத்த வேலைக்காகக் கொண்டுசெல்லப்பட்டு, பல கோடி ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. எனினும் எந்தப் பயனும் இல்லை.

நாளாந்தம் 100 பேருக்கும் அதிகமான அரச ஊழியர்கள் நெடுந்தீவுக்கு வருகை தருகின்றனர். ஊர் மக்கள் நாளாந்தம் பயணம் செய்கின்றனர். சுற்றுலாப் பயணிகள் வந்து குவிந்த வண்ணம் உள்ளனர். தனியார் படகுகளும் இங்கு பலமான நிலையில் இல்லை. எனவே இந்தத் தீவுக்கான கடற்போக்குவரத்தை உடன் சரிசெய்ய வேண்டியது அவசியமாகும்.

நெடுந்தீவில் க.பொ.த உயர்தரப் பாடசாலைகள் மூன்று உள்ளன. நீண்ட காலமாக கலைப் பிரிவுக்குரிய பாடங்களே உயர்தரத்தில் கற்பிக்கப்படுகின்றன. குறைந்தபட்சம் கலைப்பிரிவைக் கூட, திருப்தியான முறையில் கொண்டு நடத்தத் தேவையான ஆசிரியர் வளம் போதியளவில் இல்லை. உயர்தரத்தில் வரலாறு, புவியல் இந்து நாகரிகம், அரசறிவியல், போன்ற பாடங்களுக்கு ஆசிரியர் இல்லாத நிலை காணப்படுகின்றது. தமிழ் பாடத்திற்கு ஓர் ஆசிரியரே வாரத்தில் மூன்று நாள்கள் ஒரு பாடசாலையிலும், வாரத்தில் இரண்டு நாளகள் பிறிதொரு பாடசாலையிலும் கற்பிக்கவேண்டிய கட்டாயச் சூழல் உள்ளது.

நெடுந்தீவு மேற்கு பிரதான வீதி கட்டம் கட்டமாக திருத்தப்பட்டு தற்போது 2 கிலோ மீற்றர் தூரம் இன்னும் திருத்தப்படாது குன்றும் குழியுமாக உள்ளது.

நெடுந்தீவு பிராந்திய மருத்துவமனையில் நிரந்தரமான மருந்துக் கலவையாளர் இல்லை. நெடுந்தீவு மருத்துவமனைக்கு இரண்டு தாதியர் கடமையில் இருக்க வேண்டும். ஆனால், ஒருவர் மட்டுமே கடமையில் உள்ளார். ஆறு பரிசாரகர்கள் இருக்க வேண்டிய நிலையில் தற்போது மூன்று பேர் மாத்திரமே உள்ளனர். சுகாதாரப் பணி உதவியாளர்கள் 8 பேர் இருக்கவேண்டிய நிலையில் தற்போது 4 பேர் மாத்திரமே உள்ளனர். கடந்த காலங்களில் வெள்ளி அல்லது புதன் கிழமைகளில் நடைபெற்ற பற்சிகிச்சை தற்போது முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது.

எனவே, இந்த நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வைத்தேடும் நோக்கில் ஏப்ரல் மாதம் 24ஆம் திகதியன்று நாம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். பொதுமக்கள், சிவில் அமைப்புகள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு தமது ஆதரவை வழங்க வேண்டும் - என்றனர். (அ-ம)

## ஐம்பதுக்கும்...

சென்றிருந்தோர் என 150இற்கும் அதிகமானவர்கள் இந்தச் சேவையைப் பெறுவதற்காகக் காத்திருந்தனர். அவர்களில் நூறு பேரை மட்டுமே ஏற்றிக்கொண்டு, ஏனையவர்களுக்கு அனுமதி மறுத்துவிட்டு நெடுந்தாரகைப் படகு பயணித்துள்ளது. 'நூறு பேருக்கு மேல் ஏற்றுவதற்கு அனுமதியில்லை' எனக் கூறியே ஏனையவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, பாதிக்கப்பட்ட பயணிகள் தனியார் படகொன்றை 35 ஆயிரம் ரூபாவுக்கு வாடகைக்கு அமர்த்தி தமது பயணத்தைத் தொடர்ந்துள்ளனர். நெடுந்தீவின் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் நெடுந்தீவில் தங்கியிருக்கும் நிலையில், இந்தச் சம்பவத்துக்கு அவர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (அ-ம-26-66)

## படகுகள்...

ஒருவருக்குச் சொந்தமான படகும், காட்டாஸ்பத்திரி பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவருக்குச் சொந்தமான படகுமே நேற்று அதிகாலை 4 மணியளவில் நேருக்குநேர் விபத்துக்கு உள்ளாகியுள்ளன. விபத்தைத் தொடர்ந்து இரண்டு படகுகளில் இருந்த மீனவர்களும் தூக்கி வீசப்பட்ட நிலையில், ஒரு மீனவர் காணாமற் போயுள்ளார். நீண்டநேரமாக இடம்பெற்ற தேடுதலைத் தொடர்ந்து அவர் சடலமாக மீட்கப்பட்டார். விபத்தில் காயமடைந்த மற்றொரு மீனவர் மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பொலிஸாரும், மீன்பிடித் திணைக்கள அதிகாரிகளும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-213-56)

## வாந்தியால்...

என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வயிற்று வலியால் அந்த; சிறுமி அவதிப்பட்ட நிலையில், கடந்த 13ஆம் திகதி தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு உட்பட்டுள்ளார். எனினும் நேற்றுக்காலை மீண்டும் அவருக்கு வயிற்றுவலியும், வாந்தியும் ஏற்பட்டுள்ளது. வாந்தி எடுத்தபோது, சுவாசக் குழாய்க்குள் வாந்தி சென்றதால் ஏற்பட்ட இருதயச் செயலிழப்புக் காரணமாக அந்தச் சிறுமி உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். சிறுமியின் ஜனாஸா குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ம-26)

## முதியவரின்...

குடியிருப்புப் பகுதியில் வசித்துவந்த அந்த முதியவர் நேற்றுமுன்தினம் காணாமற் போயிருந்தார். இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டதுடன், தேடல் பணிகளும் இடம்பெற்று வந்தன. இவ்வாறான நிலையிலேயே, அந்த முதியவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலத்தில் காயங்கள் அவதானிக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. (அ-ம-9-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**சமையலாளர் தேவை**

வீட்டு சமையல் செய்யக்கூடிய சமையலாளர் ஒருவர் தேவை. யாழ் நகரை அண்மித்தவர்கள்.



தொடர்பு: 0777 17 22 17

### லக்னோவைத் தோற்கடித்து

# புள்ளிப் பட்டியலில் பெங்களூர் முதலிடம்

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் லக்னோவைத் தோற்கடித்து, புள்ளிப் பட்டியலில் முதலிடம் பிடித்தது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி 146 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. அதிகபட்சமாக மிச்செல் மார்ஷ் 40 ஓட்டங்களையும், முகுல் சவுத்ரி 39 ஓட்டங்களையும், படோனி 38 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ராசிக் சலாம் 4 விக்கெட்டுக்களையும், புவனேஸ்வர் குமார் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய பெங்களூர் அணிக்கு பில் ஷோல்ட் 7 ஓட்டங்களுடன் ஏமாற்றினாலும், கோலி, படிதார், ஜித்தேஸ் சர்மா ஆகியோர் நிதானமாக விளையாடி வெற்றியைத் தேடிக் கொடுத்தனர். இந்த வெற்றியைத் தொடர்ந்து புள்ளிப்பட்டியலில் பெங்களூர் அணி முதலிடத்துக்கு முன்னேறியது. (ம)



## உயிரைக் காப்பாற்றுவதில் பொலிஸார் மெத்தனம்!

### ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

அவசர காலங்களில் மக்களின் உயிரைப் பாதுகாப்பதில் ஒவ்வொரு நிமிடமும் முக்கியமானது எனும் நிலையில், பொலிஸ் அவசரச் சேவை பதிலளிக்க 3 மணிநேரம் எடுத்துக்கொள்வது சகித்துக்கொள்ள முடியாதது என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

1990 சேவை நாடு முழுவதும் சராசரியாக 13 நிமிடங்களில் சம்பவ இடத்துக்குச் சென்று உயிர்களைக் காக்கும் பணியைச் செய்கிறது.

ஆனால், பொலிஸ் அவசரச் சேவையான 119 ஒரு முறைப்பாட்டுக்குப் பதிலளிக்க 3 மணிநேரம் வரை தாமதிக்கின்றது.

ஆபத்தான நிலையில் உதவி கோரும் ஒரு குடிமகனுக்கு 3 மணிநேரம் கழித்துப் பதிலளிப்பது என்பது அந்தச் சேவையின் தோல்வியையே காட்டுகிறது.

வெறும் தொழில்நுட்பம் மட்டும் போதாது, ஊழியர்களின் அர்ப்பணிப்பும் சரியான வழிகாட்டலுமே ஒரு அவசரச் சேவையை வெற்றிகரமாக்கும். சுவ செரிய 5,000 அழைப்புகளைச் சிறப்பாகக் கையாளும் போது, அதைவிடக் குறைந்த 4,500 அழைப்புகளைப் பெறும் பொலிஸ் பிரிவு ஏன் திணறுகிறது? அரசாங்கம் உண்மையிலேயே பொதுமக்களுக்குச் சிறந்த சேவையை வழங்க விரும்பினால், வெற்றிகரமாக இயங்கும் 1990 சேவையின் மாதிரியைப் பின்பற்றித் தனது கட்டமைப்பை மாற்றியமைக்கவேண்டும் - என்றார். (ச-இ)

## பெண் மருத்துவருக்கு பாலியல் தொல்லை!

### நோயாளி கைது

களுத்துறை, ஏப். 16

களுத்துறையிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர், தமக்குச் சிகிச்சை அளிக்க வந்த பெண் மருத்துவரிடம் அநாகரிகமான முறையில் நடந்துகொண்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் மருத்துவர் உடனடியாகத் தெற்கு களுத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் பொலிஸார் சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளனர். தற்போது அவர் பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் அதே மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். சிகிச்சை முடிந்தவுடன் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)



## தவறுகளைத் திருத்திக்கொண்டு முன்னோக்கிப் பயணிப்போம்!

### நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 16

கடந்த காலங்களில் தமது அரசியல் பயணத்தில் தவறுகள் நடந்திருக்கலாம் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். அவற்றை அறிந்துதிருத்திக்கொண்டுமுன்னோக்கிச் செல்வதே தற்போதைய தேவை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தங்காலையில் உள்ள கால்டன் இல்லத்தில் நடைபெற்ற தமிழ் சிங்களப் புத்தாண்டு நிகழ்வின் போது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். முதலில் எம்மால் என்னென்ன தவறுகள் நடந்தன என்பதை நாம் தெளிவாகத் தெரிந்திருக்கவேண்டும்.

தவறுகள் யாருக்கும் நடக்கலாம், அது மனித இயல்பு.

கலாசாரத்தைப் பாதுகாப்பதும், கல்வி கற்பதும் இவ்வாறான தவறுகளைக் கண்டறிந்துநம்மைநாமேதிருத்திக்கொள்வதற்காகத்தான்.

நாட்டின் குடிமக்கள் என்ற ரீதியில் கடந்தகால கசப்பான அனுபவங்களில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு, முன்னோக்கிச் செல்லவேண்டியது அவசியம். எதிர்காலத்தில் ஒரு நாடாக முன்னேறத் தவறுகளைச் சரிசெய்துகொள்வதே சரியான பாதை - என்றார். (ச-இ)

## வலி.வடக்கின் வளமிக்க இடங்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை

### பிரதேசசபைச் செயலாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,ஏ ப்.16

வலிகாமம் வடக்கில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டிருந்தாலும், வளமிக்க பல இடங்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இதனால் அவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் செயலாளர் சிவகுமாரன் சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

குரும்பசிட்டி முதியோர் நலிவுற்றோர் நலனோன்பு நிலையத்தின் ஏற்பாட்டில் நலிவுற்ற மக்கள் மற்றும் முதியோருக்கான புத்தாண்டு ஆடைகள் மற்றும் கைவிசேடம் வழங்கும் ஆனந்த ஒன்றுகூடல் நிகழ்வு குரும்பசிட்டி கலைஞானி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் சிறப்புரையாற்றியபோது அவர் இவ்வாறுதெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வளம் மிகுந்த வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில், போரின் பின்னர் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட போதும், அவர்களின் பொருளாதாரம் முன்னேற்றமடையவில்லை. குறிப்பாக விவசாயத்தை மையமாகக் கொண்ட கிராமமாக குரும்பசிட்டிக் கிராமம் விளங்கியது. அத்தகைய இடங்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. கொரோனாவுக்குப் பின்னரான பொருளாதார நெருக்கடி, தற்போதைய எரிபொருள் நெருக்கடி என மக்களுடைய அன்றாட வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இவற்றைவிட போதைப் பொருள் பாவனை சமூகப் பிறழ்வுகளை உருவாக்கியுள்ளது. இதனால் மக்கள் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இவற்றிலிருந்து மக்களை மீட்க, அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தவேண்டும். அதற்கு அவர்கள் பயன்படுத்தக்கூடிய வளமிக்க பிரதேசங்கள் விடுவிக்கப்படவேண்டும்-என்றார். (க-66)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media